# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 (LKAS 16) இன் பிரகாரம், பெறுமதி முற்றாப் பெறுமானத்தேய்விற்குட்பட்ட எனினும் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் சொத்துக்கள் மீள மதிப்பீடு செய்யப்பட்டுக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏற்றுமதி மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் 15 பல்வேறு வழங்கல் சேவைகள் தொடர்பாகவும் 2012 ஆம் ஆண்டின் போதும் முன்னைய ஆண்டுகளின் போதும் ரூபா 5,452,001 தொகையான முற்பணம்

செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் சேவைகள் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் அம் முற்பணங்கள் தீர்த்துவைக்கப்பட்டு உரிய செலவினங்கள் கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக தவறாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறைச் சொத்துக்களின் கீழ் அச் செலவினங்கள் முற்பணமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வெளிநாட்டுப் பிரயாணக் கடன்பட்டோர் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையில் ரூபா 687,613 தொகையான அசாதாரணமான செலவு மீதியும் ஊவா பரணகம ஏற்றுமதி தயாரிப்பு கிராம உற்பத்தி விற்பனைக் கட்டுப்பாட்டு கடன்கொடுத்தோர் கணக்கின் கூட்டுத்தொகையில் ரூபா 10,403,683 தொகையான அசாதாரணமான வரவு மீதியும் தீர்க்கப்படாதிருந்தது.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான 07 ஆண்டு காலப் பகுதியின் போது திரண்டிருந்த பெறுமதி சேர் வரியாகிய (VAT) ரூபா 104,619,993 மீதியை மீள அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 06 ஆண்டுகளுக்கு மேலான காலமாக செலுத்தப்பட வேண்டிய 02 பொறுப்புக் கணக்குகளின் ரூபா 3,117,992 கூட்டுத்தொகை 2012 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 02 முதல் 15 ஆண்டுகள் வரையான காலத்தின் போது கணக்குகளில் திரண்டிருந்த ரூபா 6,011,195 தொகையான மீளச் செலுத்தப்பட வேண்டிய வைப்பு மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கு விடயங்களிற்கு எதிராக வழங்கப்பட்டுள்ள உறுதிப்படுத்தல்கள், சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அவை

கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த/ பரீசீலிக்க முடியாதிருந்தன.

| **கணக்கு விடயம்** | **தொகை** | **சமர்ப்பிக்கப்பட்டிராத சான்று** |
|---|---|---|
| | **ரூபா** | |
| தனியார் கம்பனிப் பங்குகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு | 502,491,361 | (i) முதலீட்டுச் சான்றதழ்கள் |
| | | (ii) தகவல்கள் அடங்கிய கோவை |
| ஏற்றுமதியாளரிடமிருந்து பெற வேண்டிய கடன் | 46,486,856 | (i) கடன் பதிவேடு/ பேரேடு |
| | | (ii) தகவல்கள் அடங்கிய கோவை |
| | | (iii) உள்ளபடி நிலையை உறுதிப்படுத்தும் எழுத்து மூல சான்றுகள் |
| நானாவித கடன்பட்டோர் | 13,256,823 | (i) கடன் பதிவேடு/ பேரேடு |
| நானாவித கடன்கொடுத்தோர் | 14,537,197 | (ii) மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதிகாரச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவு | ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கொள்கைகளை அமுலாக்குவதற்கான தேசிய அபிவிருத்தி மன்றம் 1992 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான 20 ஆண்டுகளின் போது கூட்டங்களை நாடாத்தியிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்** | |
| (i) நி.பி 388 மற்றும் 389 | வரையப்பட்ட காசோலைகள் தாமதமின்றி பெறுனருக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 22,687,471 பெறுமதியான 42 காசோலைகள் அவ்வாறு வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 02 மாதங்கள் முதல் 08 மாதங்கள் வரையான காலமாக உத்தியோகத்தர்களின் பொறுப்பில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) நி.பி 396 | வழங்கப்பட்டு எனினும் கொடுப்பனவிற்காக வங்கியில் சமர்ப்பிக்கப்படாது 06 மாதங்களுக்கு மேலான காலம் காலாவதியாகியிருந்த ரூபா 2,957,542 |

| | | |
|---|---|---|
| | | பெறுமதியான 16 காசோலைகள் தொடர்பாக நி.பி. பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நி.பி 756 | ரூபா 170,328,607 பெறுமதியான நிலையான சொத்துக்கள் 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நி.பி 1645 | சபையின் 28 வாகனங்களுக்கு உரித்தான வாகன சம்பவக் குறிப்பேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2010 திசெம்பர் 7 ஆந் திகதிய 150 ஆம் இலக்க வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கை | சபைக்கு தேவையான வாகனங்களின் நிதிக் குத்தகைக் கொள்வனவு முறைமையின் கீழ் பெறப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 05 ஆண்டுகளுக்காக குத்தகைக்கு 4 வாகனங்கள் பெறப்பட்டு 2012 திசெம்பர் 31 வரை ரூபா 8,680,568 தொகையான குத்தகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.6 போதிய அதிகாரப்பொறுப்பில் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவி ஒன்று இல்லாத போதிலும் இதற்கு முரணாக நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை மாதாந்தப் படிப்பணம், எரிபொருள் படிப்பணம் மற்றும் தொலைபேசி

கட்டணமாக ரூபா 1,557,337 கூட்டுத்தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

### 1.2.7 நோக்கங்களுக்கு மாறான கொடுக்கல்வாங்கல்கள்

1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவில் காணப்படும் சபைச் செயற்பாடுகளிற்கு மாறாகவும் முறையான அதிகாரப் பொறுப்பு இன்றியும் 2018 பொது நலவாய விளையாட்டு விழாவின் பலனைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல், விளையாட்டு நடவடிக்கைகளை விருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தலுக்காக ஸ்தாபிக்கப்பட்டிருந்த தனியார் கம்பனியின் பங்குகளை கொள்வனவு செய்யப்படுவதற்காக ரூபா 8 மில்லியன் 2011 ஆம் ஆண்டின் போது முதலீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், பொது நலவாய விளையாட்டு விழாவின் நலன் கிடைக்காது 2011 திசெம்பர் 31 வரையிலும் இக் கம்பனி நடவடிக்கைகள் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 32,056,755 பற்றாக்குறையாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 19,489,522 பற்றாக்குறையாகியிருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 12,567,233 தொகையால் வீழ்ச்சியுற்றிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அவ் வீழ்ச்சி தொடர்பாக வருமானப் பெறுவனவு ரூபா 122,625,176 ஆல் அதிகரித்திருந்த போதிலும் அபிவிருத்திச் செலவினம் ரூபா 92,454,006 ஆலும் நிர்வாகச் செலவினம் ரூபா 41,950,171 ஆலும் நிதிக் கிரயம் ரூபா 788,232 ஆலும் அதிகரித்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 2.2 நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான நடவடிக்கைகள்

சபையால் இந்தியாவின் சென்னையில் இலங்கை வியாபார நிலையத்தின் 05 விற்பனைக் கூடங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,079,858 தொகையான கடை வாடகை மற்றும் மின் கட்டணங்களை அறவிடுவதற்கு நீதிமன்றங்களில் 05 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயற்திட்டத்தின் கீழான செயலாற்றல் கீழே உள்ளவாறு அமையும்.

#### (அ) அரசாங்க வரவு, செலவுத் திட்ட நிகழ்ச்சித்திட்டம்

| | நிகழ்ச்சித் திட்டம் | பௌதீக செயலாற்றல் | | | நிதி செயலாற்றல் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | இலக்கிடப்பட்ட செயற்திட்டம் எண்ணிக்கை / வேலைகள் | முடிவடைந்த செயற்திட்டம் எண்ணிக்கை / வேலைகள் | செயலாற்றல் சதவீதம் | வரவு செலவுத்திட்டமிடப்பட்ட சதவீதம் | உள்ளபடியான பயன்பாடு | பயன்பாட்டின் சதவீதம் |
| | | | | நூற்றுக்கு | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | நூற்றுக்கு |
| (i) | ஒருங்கிணைந்த கமத்தொழில் மாதிரி நிகழ்ச்சித்திட்டம் | 100 | 06 | 06 | 500.0 | 75.6 | 15 |
| (ii) | ஏற்றுமதிக் கமத்தொழில் வலயம் | | | | | | |
| | ➢ அம்பாறை அன்னாசிப் பயிர்ச் செய்கை செயற்திட்டம் | 200 ஏக்கரில் 1,200,000 சிறிய அன்னாசி நாற்றுப் பயிர்செய்கையை தாபித்தல் | 52 ஏக்கரில் 174,401 சிறிய அன்னாசி நாற்றுப் பயிர்செய்கையைத் தாபித்தல் | 26 | 16.2 | 2.0 | 12 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ➢ பிங்கிரியாவில் அன்தூரியம் பூக்கள் மற்றும் வெட்டப்பட்ட வர்ணச்செடிக் கன்றுகளைப் பயிரிடும் செயற்திட்டம் | (i) | கமத்தொழிளாளர்களுக்கு 50,000 சீமேந்து பூச்சாடிகளை வழங்குதல் | 15,000 பிளாஸ்டிக் மற்றும் நைலோன் சாடிகள் மாத்திரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. | 08 | 24.8 | 27.6 | 111 |
| | (ii) | வருடாந்தம் 124,000 அன்தூரியம் பூக்களை ஏற்றுமதி செய்தல் | 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது 10,400 பூக்களும் 15,475 பூக்களும் மாத்திரமே ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தன. | | | | |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒருங்கிணைந்த கமத்தொழில் மாதிரி நிகழ்ச்சித்திட்டத்தில் இலக்கிடப்பட்ட 100 செயற்திட்டங்களில் 24 மாத்திரமே ஆரம்பமாகியிருந்தன. இவற்றில் 18 தோல்வியாகி கைவிடப்பட்டிருந்தன.

(ii) ஏற்றுமதி கமத்தொழில் வலய நிகழ்ச்சித்திட்டத்தின் பிங்கிரிய அந்தூரியன் மலரூச்செய்கை செயற்திட்டம் தொடர்பாக செயற்திட்டத்தின் உற்பத்தியை சேகரித்து பொதியிலடைத்து ஏற்றுமதித் தயாரிப்பும் பயிற்சி நிலையத்திற்குக் கட்டிடத்தை அமைக்கும் வேலை 2012 திசெம்பர் 31 அன்றும் ஆரம்பமாகியிருக்கவில்லை.

(iii) ஏற்றுமதிக் கமத்தொழில் வலய நிகழ்ச்சித்திட்டத்தின் அம்பாறை அன்னாசிப் பயிர்ச் செய்கை செயற்திட்டத்தின் சிறிய அன்னாசிச் செடிகளை வழங்கிய ஒப்பந்தக்காரர் வழங்குதலைப் புறக்கணித்து நிபந்தனைகளை மீறியிருந்தமையால் பயிர்ச்செய்கை இலக்கை எய்த முடியாதிருந்தது.

எவ்வாறெனினும், மீறியமை தொடர்பில் நேர்ந்த இழப்புத் தொடர்பாக சட்ட நடவடிக்கை 2013 செப்தெம்பர் வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏற்றுமதி மேம்பாட்டு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

| | பிரிவு | பௌதீக செயலாற்றல் இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை | இரத்துச் செய்யப்பட்ட அல்லது இடை நிறுத்திய நிகழ்ச்சித்திட்டம் | போதியளவு நிறைவுபெறாத நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை | செயலாற்றல் சதவீதம் | நிதிச் செயலாற்றல் வரவு செலவுத் திட்ட நிதிஏற்பாடு | உள்ளபடியான பயன்பாடு | பயன்பாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | நூற்றுக்கு | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | நூற்றுக்கு |
| (i) | தொழில்நுட்ப உற்பத்தி | 34 | 03 | 08 | 23 | 68 | 57.74 | 28.77 | 50 |
| (ii) | கமத்தொழில் கடற்தொழில் உற்பத்தி | 40 | 05 | 14 | 21 | 53 | 65.84 | 37.35 | 57 |
| (iii) | ஏற்றுமதிச் சேவை | 22 | 04 | 08 | 10 | 45 | 27.80 | 9.62 | 35 |
| (iv) | விற்பனை அபிவிருத்தி | 23 | 01 | 04 | 18 | 78 | 49.80 | 25.57 | 51 |
| (v) | சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சி அபிவிருத்தி | 36 | 23 | - | 13 | 36 | 81.40 | 7.80 | 10 |
| (vi) | ஏனைய ஏற்றுமதி சேவைகள் | 42 | 07 | 14 | 21 | 50 | 30.69 | 14.95 | 49 |
| (vii) | விசேட செயற்திட்டம் | 04 | 01 | 01 | 02 | 50 | 99.61 | 132.17 | 133 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (viii) | ஏனைய விசேட செயற்திட்டம் | 06 | 03 | 01 | 02 | 33 | 51.36 | 14.95 | 29 |
| | | 207 | 47 | 50 | 110 | | 464.24 | 271.18 | 58 |

**(இ) வெளிநாட்டு விற்பனைச் சந்தைக் கண்காட்சி**

ஏற்றுமதி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2008 இற்கும் 2012 இற்கும் இடையேயான காலப்பகுதியின் போது 05 வெளிநாட்டு விற்பனைச் சந்தைக் கண்காட்சிக்காக ரூபா 61.16 மில்லியன் செலவிடப்பட்டு 85 ஏற்றுமதியாளர்கள் அதில் பங்குபெறச் செய்திருந்த போதும், ஏற்றுமதி மேம்பாட்டுக்கு அதில் 11 பேர் மாத்திரமே தமது பங்களிப்பைச் செய்யக்கூடியதாக இருந்தனர். இதற்கமைய, ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கும் விதத்தில் வெளிநாட்டு விற்பனைச் சந்தைக் கண்காட்சியில் ஏற்றுமதியாக்கங்களைப் பங்குபெறச் செய்வது ஆக்கபூர்வமாக நடைபெறவில்லை.

**(ஈ) உள்நாட்டு வர்த்தகக் கண்காட்சிகள்**

ரூபா 156.6 மில்லியன் செலவிடப்பட்டு நடாத்தப்பட்ட “ஸ்ரீ லங்கா எக்ஸ்போ – 2012” சர்வதேச வர்த்தகக் கணக்காட்சிக்காக 1507 வெளிநாட்டுக் கொள்வனவுக் கம்பனிகளும் 299 உள்நாட்டு ஏற்றுமதிக் கம்பனிகளும் பங்கேற்றிருந்த போதிலும் 66 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் கட்டளைளேனும் 15 வெளிநாட்டுக் கொள்வனவுக் கம்பனிகளில் 12 ஏற்றுமதிக் கம்பனிகளிற்கு மாத்திரமே பெறப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், 2013 ஏப்ரல் 30 வரை ஒரு வருடத்திற்கு மேலானகாலம் கடந்திருந்த போதிலும் எவ்வித கட்டணங்களும் அக் கம்பனிகளிற்குக் கிடைக்கப்பெற்றிராமையால் ஏற்றுமதி சந்தர்ப்பங்கள் எதுவும் உருவாகியிருக்கவில்லை. இதன் படி வர்த்தகக் கண்காட்சிகள் நடாத்தப்படுவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட ஏற்றுமதி வருமான அதிகரிப்பிற்கு அதன் பங்களிப்பு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

(அ) சபையால் ''ஒருங்கிணைந்த கமத்தொழில் மாதிரி'', ''கமத் தொழில் வலயம்'' போன்ற ஏற்றுமதி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களில் இலக்கிடப்பட்ட நோக்கங்களை ஈடேற்றுவது தொடர்பான மதிப்பாய்வையும் மீளாய்வையும் மேற்கொள்வதற்கான பின்தொடர் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு வரைவிலக்கணத்தையும் நடைமுறைகளையும் தயாரித்து அவற்றை அமுல்படுத்தவில்லை. இதன் காரணமாக, சபையால் செயற்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுள் ஏற்றுமதி அபிவிருத்தி ஏற்பட்டதா என்பது தொடர்பில் திருப்தி கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) பல்வேறு ஏற்றுமதி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் தாபிக்கப்பட்ட 66 கம்பனிகளின் பங்குகளில் ரூபா 163,370,567 முதலீடுகள் குறித்துப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கம்பனிகள் அமைக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்ட ஏற்றுமதி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய இலக்கிடப்பட்ட நோக்கங்கள் ஈடேறுவது அல்லது தோல்வி அடைவது காரணமாக செயற்பாடுகளற்றுள்ள 37 கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 85,975,869 தொகையை மீள அறவிடுவதற்காக ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்பாட்டிலுள்ள 29 கம்பனிகளில் ரூபா 77,394,698 முதலீடு செய்யப்பட்டமை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடு தொடர்பான அறிக்கைகள் நாளதுவரையாக்கப் பட்டிராததுடன் செயற்பாட்டிலுள்ள கம்பனிகளிலிருந்தும் முதலீட்டுத் தொகைக்கு நலன்கள் பெறுவதில் கவனஞ் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) முதலீடுகளின் நிலைப்பாடு மற்றும் பெறுமதி தொடர்பாகப் போதிய பதிப்பாய்வு, மதிப்பீடு மற்றும் மீளாய்வு என்பவற்றை மேற்கொள்ளாது, 53 கம்பனிகளில் பங்கு விடயங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டுப் பெறுமதி முற்றாக

நலிவடைந்தமைக்காக ரூபா 122,822,417 நிதியேற்பாடு முறையற்ற விதத்தில் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) ஊவபரணகம பசுமை இல்லம் (Green House) செயற்திட்டத்தின் கீழ் காய்கறிகளைப் பயிரிடுவதற்காக 600 பசுமை இல்லங்களை நிர்மாணிப்பதற்குத் திட்டமிட்டபோதும் 100 இல்லங்கள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தன. எஞ்சிய 500 இல்லங்களையும் நிர்மாணிக்கும் நடவடிக்கைளை முற்றுப்பெறச் செய்வதற்காக சபை போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாது, செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவிற்குக் கொண்டுவந்திருந்தது. உடன்படிக்கை மற்றும் நிபந்தனைகளுக்கமைய, 100 இல்லங்களை நிர்மாணிப்பதற்கு ஊவா பரணகம விவசாயிகளுக்குக் கொடுப்பனவு செய்த ரூபா 5 மில்லியன் கடனை விவசாயிகளிடமிருந்து அறவீடு செய்து பொதுத் திறைசேரிக்குக் கொடுப்பனவு செய்யும் பொறுப்பு சபைக்குக் வழங்கப்பட்ட போதும், அப் பொறுப்பையும் சபை நிறைவேற்றவில்லை.

(ஈ) ஏற்றுமதியாளர்களுக்கென நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடனில் 166 ஏற்றுமதியாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த கடன் தவணைப் பணம் ரூபா 46,486,856 ஆகும். இது கிரமமாகவும் வினைத்திறனுடம் காலாகலத்திலும் அமுலாகாமையால், 15 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக இருந்தது. 141 ஏற்றுமதியாளர்களிடமிருந்து நிலுவைக் கடனான ரூபா 35,256,093 அறவிடப்படுவதற்காகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட 21 கடன்கள் தொடர்பான ரூபா 6,818,449 நிலுவைக் கடனை கொடுப்பனவு செய்யுமாறு நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. எவ்வாறாயினும், கடனை அறவிடுவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை வினைத்திறனுடனும் செயலாற்றாமை, தொடர் நடவடிக்கைகளில் ஈடுபடாமை என்பன காரணமாக அதில் 16 கடன் நிலுவைகளுக்குரிய ஏற்றுமதியாளர்கள் நிலுவைபைச் செலுத்தத் தவறியிருந்தனர். இவ்வாறிருக்கையில் ரூபா 45,477,591 தொகையான கடன் மீதி அறவிடப்பட முடியாததாகக் கருதி அறவிடமுடியாக் கடனுக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) ஏற்றுமதிக் கமத்தொழில் வலய நிகழ்ச்சித்திட்டத்தின் அம்பாறை மாவட்டத்தில் அன்னாசிப் பயிர்ச் செய்கை செயற்திட்டத்தின் 1,200,000 சிறிய அன்னாசி நாற்றுப் பயிர்செய்கையை கொள்வனவு ஒப்பந்தத்திற்காக செயலாற்றல் காப்பொன்றைப் பெற்றுக்கொள்ளாது ரூபா 4,500,000 தொகையான முற்பணம் 2009 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் இதில் 174,401 அன்னாசி நாற்றுகள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம், உடன்படிக்கையிடப்பட்ட நிபந்தனைகள் மீறியிருந்தமை மற்றும் உடன்படிக்கைக் காலம் கடந்திருந்தமையால் அறவிடப்பட வேண்டிய ரூபா 3,191,993 தொகையான எஞ்சிய முற்பணத் தொகையை 2013 மே 31 வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 இனங்காணப்பட்ட இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அம்பாந்தோட்டை படஅத கைத்தொழில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தோற்பொருள் கைத்தொழில் செயற்திட்டத்திற்காக ரூபா 1,000,000 முதலீடு செய்யப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட தனியார் கம்பனி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவது கைவிடப்பட்டிருந்தமையால் கம்பனி நடவடிக்கைகள் ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே செயலற்று முதலீடு செய்யப்பட்ட தொகை சபைக்குக் கிடைக்கப்பெறாது போயிருந்தது.

(ஆ) இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக ரூபா 2,400,000 தொகை முதலீடு செய்யப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட தனியார் கம்பனி நடவடிக்கைகள் செயற்படாததை அடுத்து 2012 ஆம் ஆண்டின் போது கலைக்கப்பட்டிருந்தமையால் அம் முதலீட்டுத் தொகையில் சபைக்கு ரூபா 1,000,000 தொகை மாத்திரமே கிடைக்கப்பெற்றிருந்தது.

## 3.4 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்

பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு முரணாக, சபையின் 05 வாகனங்களும் 04 பதவியணியினரும் வரிசை அமைச்சிற்கு 2007 ஆம் ஆண்டு முதல் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் சபை 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது வாகனப் பராமரிப்புச் செலவினம், பதவியணியினர் சம்பளம், மேலதிக நேர வேலைக் கொடுப்பனவிற்காக முறையே ரூபா 3,694,779, ரூபா 4,498,295 என மொத்தமாக ரூபா 8,193,074 சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

## 3.5 பதவியணியினர் அமைப்பு

சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் நிலைமை பின்வருமாறாகும்.

| பதவியணியினரின் வகைப்படுத்தல் | அங்கீரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| முன்றாம் நிலை | 14 | 11 | 03 |
| இரண்டாம் நிலை | 193 | 156 | 37 |
| முதலாம் நிலை | 75 | 63 | 12 |
| மொத்தம் | 282 | 230 | 52 |

முறையான அங்கீகாரமின்றி, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் 10 உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சம்பளமும் படியுமாக ரூபா 2,403,935 வழங்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்ட போதும் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது நலிவுற்ற நிலையில் இருந்தது. எவ்வாறாயினும், உள்ளகக் கணக்காய்வுயில் அறிவித்த குறைபாடுகள் தொடர்பாகவும் சபை கவனஞ் செலுத்தி அவற்றைத்திருத்துவதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2012 ஆம் ஆண்டின் பாதீட்டின் பிரகாரம், ஏற்றுமதி அபிவிருத்திச் செலவினம் மற்றும் மீண்டுவரும் செலவினத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவினம் முறையே ரூபா 468.7 ஆகவும் ரூபா 259.7 ஆகவும் இருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான செலவினம் முறையே ரூபா 332.2 மில்லியனாகவும் ரூபா 306.4 மில்லியனாகவும் ஆனமையால் உள்ளபடியான செலவினம், பாதீடு நிதியேற்பாட்டின் 71 சதவீதமாகவும் 118 சதவீதமாகவும் இருந்தது. இதன் பிரகாரம், பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலுமான குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) முதலீடு
(இ) கடனை அறவிடுதல்
(ஈ) வருமானக் கட்டுப்பாடு
(உ) சொத்துக் கட்டுப்பாடு
(ஊ) வியாபாரக் கண்காட்சிகள் நடாத்தல்
(எ) பாதீடு